**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

**எண்.100** அண்ணா சாலை, கிண்டி, சென்னை – **600 032**

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 132/மா/**2022**

**நாள்: 21.01.2023**

திரு. இரா.மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், மதுரை மாநகராட்சி,
மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவரின் 17.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.08.2022–ல் பெறப்பட்டு 132/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 17.08.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி முதலில் 72 வார்டுகளை கொண்டிருந்தது. அதன்பின், மாநகராட்சி எல்லைகளை விரிவாக்கம் செய்து மாநகராட்சியுடன், ஆணையூர், அவணியாபுரம், திருப்பரங்குன்றம், ஆகிய 3 நகராட்சிகள் மற்றும் ஹார்விபட்டி, திருநகர், விளாங்குடி, 3 பேரூராட்சிகள், மற்றும் 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு தற்போது வார்டு எண்ணிக்கை 100 ஆகவும், மண்டலங்கள் 4ல் இருந்து 5 ஆக உயர்ந்து உள்ளது. இந்நிலையில், வார்டு எண்ணிக்கையும், மண்டலங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பு செய்யப்பட்ட நிலையில் ஐந்தாறு மாதங்களாக பழைய வார்டு, பழைய மண்டலங்கள், பெயர்பலகை இன்று வரை அகற்றி விட்டு, புதிய வார்டு பெயர்கள் மற்றும் புதிய மண்டலங்கள் பெயர்பலகை வைக்காமல் இருப்பதினால், எந்த வார்டு, எந்த மண்டலம் எங்கு உள்ளது என்பது தெரியாமல், பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு தேடி கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. மேலும் படிக்காத பாமரமக்கள், அலைந்தும் பல பேரிடம்

விசாரித்துதான், உரிய மண்டலத்துக்கு செல்ல வேண்டியுள்ளது. ஐந்தாறு மாதங்களாக புதிய வார்டு பெயர்கள் மற்றும் புதிய மண்டலங்கள் பெயர்களை உரிய இடத்தில் விளம்பர பலகை மற்றும் பெயின்டில் அச்சிட்டு விளம்பரப்படுத்தாமல் இதுநாள்வரையிலும், நடவடிக்கை மேற்கொள்ளாத மதுரை மாநகராட்சி மண்டல உதவி ஆணையர்கள், கிழக்கு மண்டலம்–1, வடக்கு மண்டலம்–2, தெற்கு மண்டலம்–4, மேற்கு மண்டலம்–5, மத்திய மண்டலம்–3 மற்றும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீதும், துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், மேலும் 100 வார்டுகளிலும் புதிய பெயர்பலகை மற்றும் பெயின்டில் அச்சிடப்பட்ட விளம்பர பலகை வைக்க, மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் புகார் மனு தொடர்பாக மதுரை மாநகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) தனது 02.01.2023 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

" நாளது தேதிவரை அனைத்து மண்டலங்களிலும் இப்பணிகள் நடைபெற்று வருகிறது. அதற்குரிய புகைப்பட நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண்டலங்களில் இப்பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4)மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் செயற்பொறியாளர்(திட்டம்) அவர்கள் 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான இடங்களில் புதிய பெயர் பலகைகள் வைக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும், மீதமுள்ள பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் எனது 2.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் உடல்நலக்குறைவினால் ஆஜராகவில்லை. ஆனால் 05.01.2023 அன்று நடைபெற்ற பிறிதொரு மனுவின் மீதான நேரடி விசாரணையில் ஆஜராகும்போது இந்நேர்வு குறித்து தன்கைப்பட எழுதியுள்ள விவரங்களை முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்,

" மதுரை மாநகராட்சியில் தற்போது ஐந்து மண்டலங்களாக கடந்த பத்து மாதங்களாக செயல்பட்டு வருகிறது. ஆனால் எந்த மண்டலம் எந்த எல்லை எந்த வார்டு என்று மதுரை மாநகராட்சியால் முழுவதும் எந்த இடத்திலும் பெயர் பலகை மற்றும் வழிகாட்டுதல் பலகை வைக்காததால், பொதுமக்கள் எந்த மண்டலம் எந்த வார்டு எந்த பகுதியில் உள்ளது என்பதை தெளிவாக பெயர் பலகை வைக்க வேண்டி கோரிக்கை மனு 11.08.2022 தேதியில் பதிவு தபாலில் ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) மதுரை மாநகராட்சி ஆணையருக்கும் அனுப்பி இருந்தேன். அதில் மண்டலம் 4 (தெற்கு), உயர்திரு உதவி ஆணையர் அவர்கள் மட்டும் நடவடிக்கை எடுப்பதாக அவருடைய கடிதத்தில் Z4E3/004030/2022 நாள் 9.9.2022 தெரிவித்துள்ளார். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்

மண்டலம்–1(கிழக்கு), மண்டலம்–2 (வடக்கு), மண்டலம்–3(மத்தியம்), மண்டலம்–5 (மேற்கு) உதவி ஆணையர் அவர்கள் எனது கோரிக்கை மனுவிற்கு எந்தவித நடவடிக்கை குறித்தும் கடித மூலம் தெரிவிக்காமல் மிக அலட்சியமாக தன் கடமையை சரிவர செய்ய தவறிய உதவி ஆணையர் அவர்கள், மண்டலம்–1 (கிழக்கு), மண்டலம்–2 (வடக்கு), மண்டலம்–3 (மத்தியம்), மண்டலம்–5 (மேற்கு) அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், பொதுமக்கள் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க சுற்றறிக்கை அனுப்ப மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டும், எனது கோரிக்கை மனுவின்படி மதுரை மாநகராட்சி மண்டலங்கள் மொத்தம் ஐந்து (5) பகுதிகளிலும் பொதுமக்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் மண்டலம் மற்றும் வார்டு போன்ற பெயர்பலகைகளை விரைந்து வைக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரது புகார் மனு, மனுதாரரின் 05.01.2023 நாளிட்ட கையால் எழுதப்பட்ட அறிக்கை, மற்றும் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சியில் உள்ள மண்டலங்களை பொதுமக்கள் எளிதில் தெரிந்து கொள்ளும்வகையில் புதிய பெயர் பலகைகள் வைக்க கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களில் உள்ள பெயர்ப்பலகையில் உள்ள பழைய மண்டலம் மற்றும் பழைய வார்டுகளின் விவரங்களுக்குப் பதிலாக புதிய மண்டலம் மற்றும் புதிய வார்டுகளின் விவரங்களை பெயர்பலகையில் மாற்றி வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை மாநகராட்சி சமர்ப்பித்துள்ள புகைப்பட நகல்களில் இருந்து தெளிவாகிறது. மேற்கண்ட பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதையும் செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

இந்நிலையில் மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் பெயர்ப்பலகை வைப்பது தொடர்பான அனைத்து பணிகளையும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு இரா. மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

**3)**நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75,** சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

**4)**இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75,** சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக